முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No. 801/2018**

**Witness PW 1**

பெயர்:உமாமகேஷ்வரி

க/பெ.: சுரேஷ்

இன்று (18/02/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என்னை மாயா என்றும் அழைப்பார்கள். எனது வழக்குரையிலும், முதன்மை சாட்சியத்திலும் பொது குடும்பத்திற்கு வரவேண்டிய அல்லது பொது குடும்பத்திலிருந்து கொடுக்க வேண்டிய கடன்கள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரை 19, 21, 22 ஆகிய இனசொத்துகளில் எனது தந்தையாகிய முதல் பிரதிவாதி பதிவு செய்யப்பட்ட அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனது தம்பி சொத்தை பொறுத்து வில்லங்கங்கள் ஏற்படுத்தியது வில்லங்கம் பார்த்த பிறகு தெரிய வந்தது என வழக்கில் கூறியுள்ளது சரிதான். அந்த வில்லங்க சான்றிதழ்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு வில்லங்கம் பார்த்து இருந்தால் எனது தந்தை அடமான கடன் ஏற்படுத்திய விவரங்கள் எனக்கு தெரிய வந்து இது பற்றி வழக்கில் சொல்லியிருப்பேன் என்றாலும், வில்லங்கம் பார்க்காததால் தான் இதை பற்றி வழக்கில் நான் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. எனது தந்தை அடமான கடன் பெற்று அது வழக்காக விழுப்புரம் 2வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.393/2016 என தாக்கல் செய்யப்பட்டு 21/12/2018 தேதியில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தீர்ப்பாணை தொகையாக ரூ.3,03,533.50/- பைசா என தீர்ப்பு பெறப்பட்டது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் நிலை தீர்ப்பாணை அடிப்படையில் ஐ.ஏ.எண்.212/2019 தாக்கல் செய்யப்பட்டு அதுவும் நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு அதுபற்றி தெரியும். இறுதிநிலை தீர்ப்பாணை வழக்கில் எங்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. இறுதிநிலை தீர்ப்பாணை நிலுவையில் உள்ள போது எனது தந்தை இறந்துவிட்டார் என்றாலும், வாரிசுகளாக நானும், பிரதிவாதிகளும் சேர்க்க ஏதுவாக மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் ஐ.ஏ.258/2022ல் நான் ஒருதலைப்பட்சம் ஆக்கப்பட்டுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முதல் வாதி அழைப்பாணை பெறாமல் அவ்வழக்கில் காலதாமதப்படுத்தி

வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகப்பிரிவினைக் கேட்டு நான் சட்ட அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. எனது தந்தை 5ம் பிரதிவாதியாகிய எனது தம்பி லட்சுமணனுக்கு எழுதிக்கொடுத்த தானபத்திர சொத்தான 1 ஏக்கர் 40 செண்ட் சொத்தை இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கூட்டுகுடும்ப சொத்துகளிலிருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு எனது சகோதரர் 1ம் வாதி ராமு பெயரில் எனது தந்தை கிரையம் வாங்கி கொடுத்த 1 ஏக்கர் சொத்தை இந்த வழக்கில் கொண்டுவராததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை 3ம் பிரதிவாதி சித்ரா பேருக்கு எழுதிக்கொடுத்த 15 செண்ட் நிலத்தையும், 4ம் பிரதிவாதி கற்பகம் பெயரில் எழுதிக்கொடுத்த 19 செண்ட் சொத்தையும் வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பொதுகுடும்ப கடன்களையும் பொது குடும்பத்திலிருந்து வாங்கப்பட்ட சொத்துகளையும் வழக்கில் காட்டாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு வீடும், சொத்துகளும் கொடுக்கப்பட்டு அந்த வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. அனைத்து சொத்துகளையும் வழக்கில் கொண்டுவரும் பட்சத்தில் பிரதிவாதிகள் பாகப்பிரிவினைக்கு தயாராக உள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

(Sd/-C.R.Gowthaman)
Principal Subordinate Judge,
Villupuram.